**ஜூலை - 17**

**"உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்."**

**- ஏசா 26 : 3**

இது உலகப் பிரகாரமான சமாதானம் அல்ல, அலட்சியத்தின் சமாதானம் அல்ல, சோம்பலின் சமாதானம் அல்ல. சுகபோகத்தின் சமாதானம் அல்ல, விதிவாதத்தின் சமாதானம் அல்ல. ஆனால் கிறிஸ்துவின் சமாதானம். "என்னுடைய சமாதானம்" பின்னிட்டுப் பார்க்கப்போனால், போதகர் தேவனோடு தனக்கிருந்த சமாதானத்தை எல்லா நிலைமைகளிலும் பரிபாலித்தார் என்பதைக் காணலாம். அது தெய்வீக ஞானம், அன்பு, நீதி, வல்லமை இவைகளுக்கு முழுமனதுடன் ஒப்படைக்கிற ஒரு சமாதானம். அவருடைய உண்மையுள்ளவர்களுக்கு எந்த விதத்திலும் ஒன்றும் தீங்கு செய்யாது என்றும், தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்றும் கர்த்தருடைய உண்மையுள்ளவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கிருபையுள்ள வாக்குத்தத்தத்தை ஞாபகப்படுத்தும் ஒரு சமாதானம். இந்த சமாதானம் தெய்வீக பராமரிப்பு அனுமதிக்கிற எதையும் விசுவாசத்தினாலே ஏற்றுக்கொள்ளக் கூடும். இந்தச் சமாதானம் அதன் கண்ணீர்களினுடே எஜமான் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற முடிவாகக்கிடைக்கப்போகிற ஆசீர்வாதங்களை சந்தோஷத்தோடே ஊடுருவிப்பார்க்கக் கூடும். இப்பொழுதிருக்கிற சமாதானமும் சந்தோஷமும் அந்த ஆசிர்வாதங்களுக்கு வெறும் முன் அனுபவங்களாக இருக்கின்றன. **- Z ’99, 95 (R 2455)**

கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனது விசுவாசத்தினாலே நீதிமானாக்குதலையும், பிரதிஷ்டையையும் அல்லாமல், அவைகளின் நிபந்தனைகளை உண்மையாய் நிறைவேற்றுவதையும் குறிக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு மாத்திரம் தேவன் பூரண சமாதானத்தை வாக்குத்தத்தம் செய்கிறார். அவர்களுடைய சமாதானம், மனுஷீகத்தின் இருதயம், மனது இவைகளுடைய இளைப்பாறுதலினால் ஏற்படுவதில்லை. இது தேவசமாதானம், இதை அனுபவிக்கத் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்திருக்கிறவர்கள் சலுகை பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிஷ்டையின் ஆவியின் பூரணத்துவத்துக்குச் சமமாக, நீளத்திலும், ஆழத்திலும், உயரத்திலும், அகலத்திலும் அதிகரிக்கிற ஒரு சமாதானம். **- P ’30, 79.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 29:11; 119:165; ஏசா 54:10,13; யோவா 14:27; ரோம 8:6; 15:13,33; எபே 2:14-17; பிலி 4:7,9; கொலோ 1:20; 3:15; எபி 4;**

**கோபுர வாசிப்பு : Z ’14, 102 (R 5431)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் பூரண சமாதானத்தைக் காத்துக்கொண்டேனா? ஏன்? எவ்வாறு? அதில் அனுகூலங்களாக அல்லது பிரதிகூலங்களாயிருந்தவை எவை? பலன் என்ன?**